13.5.78

78

தமிழ் வாழ்க

துணர் ௫௰ — மலர் ௧௨

தமிழ்ப்பொழில்

திருவள்ளுவர் யாண்டு ௨௲௮

நள, பங்குனி

(1977 — மார்ச்சு — ஏப்ரல்)

கரந்தைத் தமிழ்ச் சங்கம்,

தஞ்சை.

தமிழ்ப் பொழில்

துணர் ௩௰ உள்ளுறை மலர் ௧௨

பக்கம்

1. பாண்டியன் பரிசில் பூதம் 305
நெல்லை. ந. சொக்கலிங்கம், எம். ஏ.,

2. பிரச்சாரத்தில் இலக்கியம் 314
முனைவர் சாலை இளந்திரையன்

3. பழந்தமிழ் நூல்களில் விலங்கினத்தின் காதற் பண்புகள்
சுவாமிநாத காசிநாதன் 324

4. குறளில் வீட்டியல் 330
K. சோமசுந்தரம், பி.ஏ. பி.எல்.,

தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர்	திருவள்ளுவர் யாண்டு உ௰௮	மலர்
௫௰	நள, பங்குனி	௧௨
	(1977 மார்ச்சு. ஏப்ரல்.)	

பாண்டியன் பரிசில் பூதம்

நெல்லை. ந. சொக்கலிங்கம், எம்.ஏ..

ம. தி. தா. இந்துக்கல்லூரி, திருநெல்வேலி.10.

(சென்ற இதழ் தொடர்ச்சி)

பேழை வந்த வரலாறு :

முன்னாளில் பாண்டியனின் படை நடத்திப் பகைமை கொண்ட சோழ மன்னவனைக் கதிர் நாட்டினை ஆண்ட முன்னோன் வெற்றி பெற்றான். அவ்வெற்றிக்குப் பாண்டியன் தந்த பரிசுதான் அப்பேழையாகும்.

'' பழநாளிற் பாண்டியனின் படைந டத்திப்
பகைகொண்ட சோழனையும்வெற்றி கொண்ட
அழல்வேலான் என்னருமை மூதா தைக்கே
அளித்தான்ஓர் பேழையினைப் பரிசாய் '' (இயல் : 31)

என்பது அன்னத்தின் வாக்கு. ஆனால் நரிக்கண்ணன் கூற்று வேறு வகையாக அமைகிறது, 'நரிக்கண்ணனின் பாட்டனுக்குப் பாட்டனும் பறைக் கண்ணனுக்கு குதிரை திரை கொண்டநெடுமுடியான் என்னும் கொடு நாட்டு மன்னன் பரிசாக அளித்த நாடு கதிர்நாடு. அந்த நாளில் பரிசாகக் கொடுக்கப்பட்ட அருஞ்செப்புப்பட்டயத்தைக் கதிரை வேலனின் முன்னோன் முத்தப்பன் மறைத்து விட்டான். மேலும் மூன்றும்நாள் உறங்கும் வேளை பார்த்துக்கொலையும் செய்து விட்டான். அவன் பின்னோனும் அன்னத்தின் தந்தை கதிரை வேலன், என்னையும் நாட்டை விட்டுப் போகுமாறு கூறி விட்டான் (இயல் 15) என்றும் கூறினன் நரிக்கண்ணன் தன் மன்னனிடம். இது நரிவிட்ட கரடியாகும்.

நரிவிட்ட மலைப்பூதம் :-

பாண்டியனார் தந்த பழம் பெரிய பரிசுப் பேழையினைப் பலரும் தேடிக் காண முனைந்தனர். நரிக்கண்ணன் கைக்கெட்டியது வாய்க் கெட்டவில்லை என்னும் ஏக்கத்தில் தேட எண்ணினான். தன் நாட்டின் அமைச்சனுடன் பேழையைப் பற்றி ஆராய்ந்தான். கதிர் நாட்டின் தென்மலையில் வாழும் திருடர்கள் ஒரு வேளை மறைத்து வைத்திருக்கக்கூடும் என்றான் அவன். ஆகவே, தென்மலையில் இனி நாம் தேடியாக வேண்டும். மற்றவர்களை அம்மலைப் பக்கம் போவது கூடாதென்று தடுப்பது பொருந்தாதே என்றான் அமைச்சன். உடன் நரிக்கண்ணன் அமைச்சனிடம்,

'' ஆம்! இதற்கோர் சூழ்ச்சியினை நானு ரைப்பேன்
அம்மலையில் இப்போதே பூதம் ஒன்றை
நாமனுப்பி அஞ்சும்வகை செய்யச் சொல்லி
நாடெல்லாம் அந்நிலையைப் பரப்ப வேண்டும்
போம்மக்கள் போவதற்கு நடுங்கு வார்கள் '' (இயல் 47)

என்று தன் சூழ்ச்சியினைச் சொன்னான்.

நரிக்கண்ணன் ஏற்பாட்டின்படி ' எட்டி ' என்பான் பூதமாக மாறிக் கூச்சலிட்டான் மலைமேல். நரிக்கண்ணன் உருவாக்கி விட்ட பூதத்தின் அடையாளத்தை ஆசிரியர் பாரதிதாசனார் அம்பலப் படுத்துகிறார் இதோ :

'' எட்டி '' எனும் ஓர் ஆளை அழைத்து வந்தே
எரிவிழியும் கரிமுகமும் நீண்ட பல்லும்
குட்டைமயிர் விரிதலையும் கொடுவாள் கையும்
கூக்குரலும் நீர்ப்பாம்பு நெளியும் மார்பும்
கட்டியதோர் காருடையும் ஆக மாற்றிக்
காணுவார் நிலைப்படியே பூதம் ஆக்கி
விட்டார்கள் மலையின்மேல் ''. (இயல் 48).

பூதம் விளைவித்த பெரும்பூசல் :

வயலுக்குக் காலை வேளையில் உழச் சென்ற உழவர்கள் எளிய நடைப்பாட்டுப்பாடி மலைச்சாரலின் அருகில் உள்ள நன்செய் நிலத்தை நோக்கிச் சென்றார்கள். அப்போது பூதம் விளைவித்த பெருங்கூச்சலினைச் செவிமடுத்தார்கள் அவர்கள். விலா எலும்புகள் எல்லாம் ஒடிந்துவிடும் அளவிற்குத் தங்கள் ஏரையும் எருதுகளையும்,

தாற்றுக் கோலையும் நோக்காது பெருமூச்சுவிட்டு ஊருக்குள் ஓடோடி வந்து மற்றவர்களிடம் பூதக் கூச்சலினைப்புதுக்கிக் கூறினார்கள். மலைப்பக்கமே செல்லாது, இவ்வுழவர்களின் கூற்றினைச் செவிமடுத்த ஒருவன், தன் கற்பனையில் பூதக்கயிறு திரிக்க முற்பட்டான். ஐந்தாறு பூதங்கள் அம்மலைமேல் ஆட்களைத் தின்று தீர்ப்பதாகவும், தான் மட்டும் தப்பி வந்துவிட்டதாகவும் கூறினான். உடன் நின்ற இன்னொருவன் ''வாலிருந்ததா'' எனக் கேட்க, வால் போல ஒன்றிருந்தது என்று மேலும்கதை அளந்தான். அப்பூதங்கள் வீதி வரையிலும் வந்தது என்று அவன் சொல்ல, அது தன்னைக் கேட்டிருந்தவன் தெருவில் அரண்டுபோய் 'பூதம்! பூதம்!' என்று அலறிக்கொண்டோடத் தெருவில் எங்கும் ஒரே பரபரப்பு.

சாலை வழியே நடந்து செல்வார் தம்பின் வருவோரைத் திரும்பிப் பாராது 'பூதம்' என்று அஞ்சி ஓடி முன்னே வருகின்றவரைக் கட்டிப் பிடிக்க எதிர்வந்த அவர்களும் பூதம் என்று அலறி ஓடித் தம் வீட்டு முற்றத்தில் விளையாடும் குழந்தைகளின் கண்களில் புழுதி விழுமாறு நிலைகலங்கிப் போய் விழுவார்களாம். இவ்வாறு பூதம் விளைவித்த நடுக்கம் நாடு முழுக்கப்பரவிற்று. ஆயின் நரிக்கண்ணன் ஆட்கள் மட்டும் தென்மலையில் பேழையினைத் தேடினார்கள். இச்சூழ்ச்சிச் செய்தியினைத் திருடர் தலைவனும் வீரப்பனிடம், அவன் தோழன் ஒருவன் நகைச்சுவை ததும்பக் கூறி மகிழ்கின்றான்.

''எழிற்பாண்டியன் பரிசைத் தேடுகின்றார்:
தென்மலையிற் பிறர்அணுகா திருக்கும் வண்ணம்
செய்துவிட ஒருவனை அம்மலைமேல் ஏற்றித்
தின்னவரும் பூதமிது என்று சொல்லித்
தெருவாரை அழும்பிள்ளை ஆக்கிவைத்தே
அன்னவரே பேழையினைத் தேடலானார்''

(இயல் 56)

என்றான். உண்மையிலே பேழையை மறைத்து வைத்திருப்பவன் வீரப்பன்தான். ஆனால் பேழையினைத் தேடும் தன் மைந்தன் வேலனிடம் தானே நேரிற் கொடுக்க அவன் விரும்பவில்லை. ஏனென்றால் தான் ஈடுபட்டிருந்தது திருட்டுத்தொழில் தன் மகனே தன்னை வெறுக்கவும் பேழையினை வாங்க மறுக்கவும் கூடும் என்பதனால், வேறு ஒருவர் வழியாக வேலன் கைக்குப் பேழை கிட்டுமாறு செய்ய எண்ணித் திட்டமிட்டான்.

தென்மலையின் அருகில் கழுதைப் பொதி சுமக்கப் பின் செல்லும் கூனன் ஏகாலியும், பஞ்சுப் பொதி கொண்டு போவோரும், நீலச் சாயம் எடுத்துச் செல்வோரும், பிறரும் 'பூதம்' என்று கூறினாலே அஞ்சி வீழ்ந்திடுவார் அவ்வழியில். பார்க்கும் எப்பொருளும் கரும்பூதமாயும் வெண்பூதமாயும் தென்பட்டது அன்னோர்க்கு. அரண்மனையில் மாவுத்தன் யானை வருவதனைப் பூதமென மயங்கி வைக்கோல் வண்டியில் சாய, வண்டி கூரைமேல் சாய, எல்லாம் நெருப்பில் வீழ்த் தீப்பரவிற்று எங்கும். நெருப்பு, கொழுந்து விட்டு எரிந்தது. நெருப்பின் பேரொளியைப் பூதம் சிரிப்பதாக எண்ணி அலறினார்கள் அண்டை ஊரார். இவ்வாறு பூதம்மக்களை எல்லாம் அஞ்ச வைத்தது. வீரப்பனும் ஐந்தாறு பூதங்களைத் தென்மலைக்கு அனுப்பி நரிக்கண்ணன் செயலை உளவறியத் திட்டமிட்டான்.

பூதப்பொய் வெளிப்படுதல்:-

நரிக்கண்ணன் அமைச்சனுடைய அருமை மகன் நீலனும், பேழையைத் தேடிக் காணப்புறப்பட்டான். வரும் வழியில் ஆற்றோரம் அன்னத்தின் தோழி நீலியைக் கண்டு காதல் மொழி பேசுகின்றான் மாலை மயங்கி இரவு மலர்கிறது. நீலன் நீலியைக் குடிசைக்கு விரைந்து போமாறும் பூதம் வரும் என்றும்கூறினான். ஆனால் நீலியோ குலுக்கென்று சிரித்தாள். பூதமெனப் புளுகி விட்ட கதையை எண்ணிச் சிரிக்கும் அவள், பூதத்திற்குப் புது விளக்கம் தருகின்றாள்.

''உயிர்வகையில் பூதம் என ஒன்று மில்லை,
தன்னகத்தில் வளர்ந்துவரும் மடமையின்பேர்
தன்னடியால் நடவாத பூத மென்று
சொன்னகற்றோர் மொழியினைநான் ஒப்புகின்றேன்,
தொன்மை எனும் உச்சியிலே அறிவால் வாழ்ந்த
பொன்னகத்தில் தமிழகத்தில் தாயகத்தில்
பூதம் எனும் சொல்நுழைதல் புதுமை என்றாள்''

(இயல் 57)

இவ்வாறு நீலியின் முலம் பூதம் என்பது பொய்: புளுகு என்பது வற்புறுத்தப் படுகிறேது. அதனை நம்புவது பகுத்தறிவு ஆகாது என்பதனால் பாரதிதாசனார் நீலியின் மூலம் பேசுகின்றார்.

நரிக்கண்ணனே பூதத்திற்கு அஞ்சல்:-

தென்மலையில் நரிக்கண்ணனின் ஆட்கள் பல நாட்கள் மலையைத் தோண்டினார்கள். ஒருநாள் இரவில் அம்மலையுச்சியில் திடீரென ஒரு

பெருங்கூச்சல் கேட்டது. நரிக்கண்ணன் ஆட்கள் அனைவரும் அஞ்சி நடுங்கி அரண்மனைக்கு ஓடிப்போய் பெரும்பூதம் ஒன்று மலையில் வந்து கூச்சலிட்டதனைக் கூறினர். முடிவில் நரிக்கண்ணன்,

'' பாடுபட்டு நான்கண்ட சூழ்ச்சி தன்னைப்
பயன்படுத்திக் கொண்டான்அ வன்யார் என்றே ''

(இயல் 65)

கண்டறியத்தானே நேரில் புறப்பட்டுப் போனான். நான்குமுறை மலையின் அடியில் நின்று பார்த்தான். அவன் பார்க்கப்பார்க்கப் பூதம் பெரிதாக வளர்வது போலத் தென்பட்டது, நடுக்கம் ஏற்பட்டது நரிக்கண்ணனுக்கே! இப்படிப்பட்டதொரு பெரும்பூதம் இருக்குமெனத்தான் முன்பேஅறியாமல் போய்விட்டமைக்கு மிக வருந்தினான். தென்மலைக்கும் அரண்மனைக்கும் இடையில் உள்ள நெடுந்தொலைவை எண்ணியபோது அவனுக்கு மலைப்பு ஏற்பட்டது· மயக்கமேவந்து விட்டது. இப்பெரும்பூதத்திடமிருந்து எப்படித்தப்புவது என்று எண்ணி ஓடலானான். அரண்மனையிலும் பூதம் என்று எதிரே வருவோர்கூற, நரிக்கண்ணன் எங்கே ஓடுவது என்று திசை தெரியாமல் திணறினான், திக்கு முக்காடினான். அப்போது அவன் எதிர் வந்த ஆயிரம்பேர், '' ஒரு தென்னை மரம் அளவு உயரம் உள்ள பூதம் வந்தது'' என்றனர். அது கேட்ட நரிக்கண்ணன் கிழக்கு நோக்கி ஓடி, ஆனையூர்ப் பள்ளியில் அடைக்கலம் புகுந்தான். அரண்மனையில் உள்ள நரியின் ஆட்கள் எல்லோரும் அரண்மனையிலிருந்து ஓடினர். அச்சத்தினால் ஆருயிர் விட்டவர் பலராவர்.

அரண்மனையில் உள்ளோர் வெளியேற அன்னம், வேலன், நீலி முதலியோர் உள் நுழைந்தனர். அங்கே அன்னம்,

'' ஆளுயரம் இருந்ததுவாம் நரியார் பூதம்!
ஆள் ஒருவன் தோளிலோர் ஆளையேற்றித்
தோளுயர்ந்த இரட்டையாட் பூதமன்றோ
கடுநெருப்பைக் கக்குகின்ற நமது பூதம்!

என்றுரைத்து,

'' கோளுக்குக் கோள்பொய்க்குப் பொய்யே வேண்டும்
கொடியவன் வெட்டிய கிணற்றில் அவனே
வீழ்ந்தான் ''

(இயல் 66).

என்று கூறிப் பூதப் பொய்ம்மையை அம்பலப்படுத்தினுள். இவ்வாறு நரிக்கண்ணன் விட்ட பூதமே அவனை அச்சுறுத்தியது. ஆம்! நரிக்கண்ணனையும் அவனுக்குத் துணை போனவரையும் நாட்டைவிட்டே ஓட வைத்தது புதுப் பூதம் ஆகும்!

மடமைக்குத் தோல்வி:-

நீலனும் நீலியும் நீலன் வீட்டிலிருந்து பேசிக் கொண்டிருந்த போது மெதுவாக நீலன் நீலியிடம், 'பூதம் என ஒன்றில்லை என்ருயே இப்போது விண்ணையே மோதிவிடுவது போன்று வந்துவிட்ட பூதத்தை நீ பார்த்தாய் அன்ருே! ''என்ருன். உடன் நீலியோ'',

''முன்வந்த பூதத்தை நரிவிடுத்தான்!
முதற்பூதம் நடுநடுங்கிச் சாகுமாறு
பின்வந்த பூதத்தை இளைய அன்னம்
பெற்றெடுத்தாள்'' (இயல் 68)

என்ருள். இன்னும் நீலனுக்கு விளங்கவில்லை. மீண்டும் நீலி,

''இதன் பொருள்தான் மடைமைமேல் வெற்றி'' என்றும்,
''ஓர் ஆளும் கருப்புடையும் பூதம்'' என்றும்

கூறிப் பூதச் செய்தியைப் பொய்ச்செய்தி என நிறுவிக் காட்டினுள். மேலும் பின் வந்த பூதத்தை ஏவி விட அன்னத்திற்கு உதவியவன் 'துறவி' என்றும் கூறினுள் நீலி.

நூறு பூதம் வந்த கதை:-

பூதப்புன்மை அறிந்த நீலன் நேரே ஆனையூர்ப்பள்ளியில் அஞ்சி நடுங்கி அடைக்கலம் புகுந்த நரிக்கண்ணனிடம் சென்று, பூதத்துக்கு அஞ்சுவதோ? மன்னவரே! இது பொய்ப்பூதம்! ஆள் கொண்டு செய்த பூதம்! ஊதினுல் பறந்துவிடும் பூதம்! வற்றி உலுத்த ஒரு மிலார்! அன்னம் விட்ட பூதம் இது! ''என்று உண்மையை உடைத்து விட்டான். நரிக்கண்ணன் எரிக்கண்ணனுக மாறிச் சீறினுன். ஏமாற்றத்தை எண்ணி நாணினுன். நைந்தான். அப்போது நீலன் அவனிடம் 'அரண்மனைக்குள் மீண்டும் பூதங்களாகி உருமாறிச் சென்று அன்னம், வேலன், துறவி முதலியோரைத் தாக்கி விரட்ட வேண்டும்' என்ருன். அதன்படி இரவு நூறு பூதம் அனுப்புவதாக நரிக்கண்ணன் ஒப்புக்கொண்டான். இதே செய்தியினை நீலன் நரிக்குத் தெரியாத வண்ணம் அரண்மனையில் அன்னத்திடம்,

''இன்றிரவு பூதங்கள் நூறு வந்தே
இங்குள்ளோர் அனைவரையும் கொன்று போடும்!
ஒன்றதிலே நரிப்பூதம்! மற்ற எல்லாம்
உடனிருக்கும் படைமறவர் எனும் பூதங்கள்''
(இயல் 71)

என்று கூறிவிட்டான். உடனிருந்த துறவி பூதத்தை எதிர்க்கத் திட்டம் இட்டான். நீலனிடம் அவன் தந்தையை மட்டும் விட்டு வைக்க அடையாளம் கூறும் வண்ணம் கேட்டான்.

'' . . . . தந்தை
இடது கையில் வேப்பிலேவைத் திருப்பார், அந்த
மன்னன் அடையாளமோ தலையில் மாம்பூ
வைத்திருப்பான் அறிந்திடுவீர்'' (இயல் 71)

என்பது நீலன் கூறிய அடையாள மொழி. இதற்கிடையில் அன்னம் அரசன் வேழவனைக் கண்டு பூதத்தால் கதிர்நாடு பட்ட கண்ணீரைக் கூறிப் பூதத்தை வெட்டிவீழ்த்த அனுமதி வேண்டினள். மன்னனும் ஆணை கொடுத்தனன். இரவில் வரும் நூறு பூதங்களை நொறுக்கித் தள்ள அன்னமும் அனைவரும் ஆயத்தமானர்கள்.

பூதப்போர்வை விலகிற்று:-

துறவி, வேலனைப் படைத்தலைமை ஏற்கக் கூறினர். வரிப்புலியின் கூட்டம் போல் வாளெடுத்துப் பாயுமாறு வேண்டினர், தூண்டினர். அன்னமும் வாளடுத்துப் பூதமாய் வருவாரின் தாளெடுக்கப் புறப்பட்டாள். இரவும் வந்தது, பூதங்களும் அரண்மனை வாயிலுக்குள் புகுந்தன. கடும்போர் நடைபெற்றது. அந்நள்ளிரவில்

'' . . . . பனையினின்று
காய்இற்று வீழ்வதுபோல் நரிக்கண்ணன்தன்
கருந்தலை வீழ்ந்ததுவே அன்னத்தின் வாளால்! ''
(இயல் 74)

பூதமென வந்த அமைச்சனுக்கு உயிர்ப்பிச்சை அளிக்கப்பட்டது, மற்றவர்களுக்கு வாள் வீச்சின் வண்ணப்பரிசுகள். வெட்டி வீழ்த்தப்பட்ட பூதங்களின் (பிணங்களின்) முகத்தையெல்லாம் தெளிவாக வெளிப்படுத்தி வரிசையுறக் கிடத்திவிட்டு அரண்மனையை அடைந்தான் வேலன்.

நரிக்கண்ணன் வீழ்ச்சி பற்றி அவன் அமைச்சனே துறவியிடம் கூறுகின்றன்.

'' . . . . பூதப்போர்வை
காப்பாற்றும் என நினைத்தார்! அதனால் மாண்டார்!'' (இயல் 75)
என்பதே அம்மொழி. தொடர்ந்து வேலன், அமைச்சரை மட்டும் அழைத்து வந்ததற்குக் காரணம் 'பூதம் என்பது பொய் என்பதனை நிலைநாட்டவே'' என்று கூறினன்.

''பூதமெனச் சொல்வதெல்லாம் மனிதர் என்று
புகல்வதற்கே பிணத்தையெல்லாம் வரிசை யாக்கி''
(இயல் 75)

மறுநாட்காலை மக்களும் மன்னனும் நேரிற்காண வேண்டு மெனவும் வேலன் கூறினன். ஆம்! ஊர் மக்களும் பூதப் போர்வையின் வீழ்ச்சியைக் கண்ணாரக் கண்டனர். வேழவனும் கண்டான் தன் படைத் தலைவனின் வீழ்ச்சியை, அவன் வருந்தினன்.

'' . . . . நரிக்கண்ணற்கு
வரும் இந்த நிலைக்கிரக்கம் கொண்டானேனும்
வஞ்சகர்க்கு வாய்ப்பதுதான் வாய்த்த தென்று
கருதினன், பூதமென வந்த தாலே
கட்டோடு மாண்டுவிட்டான்! '' (இயல் 77)

அவன் வீழ்ச்சி மக்கள் உள்ளத்தில் துன்பத்தை ஏற்படுத்தாமல் புது மலர்ச்சியை ஏற்படுத்தியது. நரியும் வீழ்ந்தது, பூதமும் போயிற்று.

பூதக்கற்பனையை நுழைத்த காரணம்:-

பாரதிதாசன் இருபதின் எழுச்சிக் கவிஞராகத் திகழ்ந்தவர். முற்போக்கு எண்ணங்களையும் முடக்கு வாதங்களையும் முனை மழுங்கச் செய்யும் கவிதை வண்ணங்களையும் கருத்தூற்று மலையூற்ருய்ப் பெருக்கெடுக்க வாரி வழங்கியவர். அவர்தம் நெஞ்சில் ஓடும் உயிரோட்டமான கருத்து,

''மூடப்பழக்கம் முடிவற்ற கண்ணுறக்கம்
ஓடுவதென்ருே? உயர்வ தென்ருே?
(பாரதிதாசன் கவிதைகள் 1. பக்கம் 15)

''சாதிமத பேதங்கள் மூட வழக்கங்கள்
தாங்கி நடைபெற்றுவரும் சண்டையுலகிதனை
ஊதையினில் துரும்புபோல் அலக்கழிப்போம், பின்னர்
ஒழித்திடுவோம் புதியதோர் உலகம் செய்வோம்!
(பாரதிதாசன் கவிதைகள் 1. பக். 146)

என்பதாகும். இங்கே வரும் பூதக் கற்பனையும் மூடப்பழக்கத்துள் ஒன்றுதான். மக்கள் மனத்திலிருந்து அப்பொய் மூட்டைகளை - மட மைக் கதைகளை அகற்ற எண்ணியே பூதக்கற்பனையை இந்நூலில் விளக்கியுள்ளார் பாரதிதாசனார். பூதக்கதையினை இப்பரிசில் நுழைக்க இஃது ஒரு தலை சிறந்த காரணம் ஆகும் பாரதிதாசனாரே நீலியின் வாய்ச்சொல் மூலம் இதனை விளக்கியுள்ளார்.

''உயிர்வகையில் பூதம் என ஒன்று மில்லை.
தன்னகத்தில் வளர்ந்துவரும் மடமையின் பேர்
தன்னடியால் நடவாத பூதமென்று
சொன்னகற்றோர் மொழியினை நான் ஒப்புகின்றேன்

(இயல் 57)

என்பது அது. கதை நீட்சிக்கும் இக்கற்பனை பெரிதும் உதவு கின்றது. இக்காரணம் இரண்டாம் நிலை பெறுவதே ஆகும். பூதக் கற்பனைபற்றி முனைவர். சாலை இளந்திரையன கூறும் காரணம் வரு மாறு: ''மக்களின் மடமையை இடித்துகாட்டுவனவாக இந்த நகைச் சுவைக்காட்சிகள் இயல்பாக அமைந்துள்ளன பொதுவாகவே மனித மனத்துக்கு இப்படி ஓர் இயல்பே இருக்கிறது. அற்புதங்கள் பற்றிய நிகழ்ச்சிகள் பரவுது இப்படித்தான். 'பறக்கும் தட்டு' பல நெஞ்சங் களுக்கு இப்படிக் கதையடிக்கும் வாய்ப்பைக் கொடுத்ததல்லவா'' என்கிறார். ஆக, பாண்டியன் பரிசல் வரும் பூதக் கற்பனை, மக்கள் மனத்தில் மண்டிக் கிடக்கும் மடமையிருளை அகற்ற ஒரு வாய்ப்பை ஏற்படுத்தி தந்தது மட்டுமல்லாமல், கதைப் போக்கினைக் கிட்டத் தட்ட பத்து இயல்களுக்கு மேல் நீட்டிக் காட்டவும் பயன்பட்டது எனலாம்.

பயன்பட்ட நூல்கள்:

1. பாண்டியன் பரிசு. எட்டாம் பதிப்பு. பாரிநிலையம். 1967
2. பாரதிதாசன் கவிதைகள் முதற்தொகுதி, பதினான்காம் பதிப்பு' பாரிநிலையம், 1966
3. புரட்சிக் கவிஞர் கவிதை வளம்;பக்: 179-181, முனைவர் சாலை இளந்திரையன். முதற் பதிப்பு. பாரிநிலையம். 1965

பிரச்சாரத்தில் இலக்கியம்

(பாரதிதாசனின் 'நல்லமுத்துக்கதை' யை அடிப்படையாகக் கொண்ட ஒரு கள ஆய்வு)

முனைவர் சாலை இளந்திரையன்

கலையிலே கொள்கைப் பிரச்சாரமே கூடாது என்னும் கொள்கை ஒன்று, ஒருகாலத்தில், ஓரளவு செல்வாக்குப் பெற்றிருந்தது. இன்று, ஒரு குறிப்பிட்ட நோக்கத்துக் காகவே அல்லது சமுதாய வளர்ச்சியை வலியுறுத்திப் பிரச்சாரம் செய்யவே கலை படைக்கப் படுகிறது என்ற கொள்கை பரவலாக ஏற்கப்பட்டுள்ளது. இதற்கு அரண் செய்யும் விதமாக, ''நம்முடைய நாட்டுக் கோயில் களெல்லாம் சிற்பக் கலைக்குப் பிரசாரங்கள், நம்முடைய நாட்டுத் திருக்குளங்கள் எல்லாம் கட்டிடக் கலைக்குப் பிரச்சாரங்கள், நம்முடைய நாட்டுக் காவியங்களெல்லாம் மதக் கருத்துக்களுக்குப் பிரச்சாரங்கள், நம்முடைய நாட்டுச் சட்டமன்றப் பேருரைகளெல்லம் அரசியலுக்குப் பிரச்சாரங்கள்'' என்னும் கருத்து (1) எடுத்துரைக்கப்படுகிறது. இலக்கியங்களின் மூலம் அரசியல் கொள்கைகளையும் மதக்கொள்கைகளையும் சமுதாய சீர்திருத்தக் கொள்கைகளையும் பரப்பலாம்' என்னும் மற்றொருவரின் கூற்றும் (2) இதை வலியுறுத்துகிறது.

இப்படி ஓங்கிச் சொல்லும் பொழுது, - அரசியல் மேடையில் நிகழும் எல்லாப் பேச்சுகளும் பத்திரிகையில் வரும் எல்லாக்கதை, கவிதை கட்டுரைகளும் இலக்கியம் அல்லது கலை என்று முடிவு செய்துவிடக் கூடிய ஆபத்து இருக்கிறது. மேற்கண்ட கொள்கை இப்படிப்பட்ட ஓர் ஆபத்துக்கு வழிநடத்தி, விடாதபடி - எந்தெந்தப் பண்புகளைப் பெற்றிருந்தால் ஒரு பிரச்சாரம் இலக்கியம் என்று கருதப்படுவதற்குரிய தகுதியைப் பெறும்? என்பதைப் பற்றிச்சிந்திக்க வேண்டியது அவசியமாகிறது. இந்த நோக்கிலேயே, - இந்தி எதிர்ப்புப் பிரச்சாரத்துக்காக எழுதப்பட்ட நல்லமுத்துக் கதை' என்னும் (பதினொரு காட்சிகள் கொண்ட) ஓரங்க நாடகம் இங்கே ஆராயப்படுகிறது.

வெள்ளையப்பன், மண்ணாங்கட்டி என்பவர்களின் மகனாகிய நல்லமுத்து என்பவன், ஓர் இளைஞனுக்குரிய எந்தத்துடிப்பு உணர்ச்சியும் இல்லாதவனாகவும் காலாவதியான சில பழமூடக் கொள்கைகளின் பிரதிநிதியாகவும் இருந்து வருகிறான், தாய்மொழிப் பற்று மட்டும் அவனிடம் சிறிதளவு இருந்ததுதனதுதிருமண ஏற்பாடு பற்றியோ தனது தந்தையின் ஒழுக்கக்கேடு பற்றியோ எந்த அக்கறையும் இல்லாது இருந்த அவன், - தற்செயலாக நாட்டிலே

வெடித்து எழுந்த தமிழ்ப்பாதுகாப்பு (இந்தி எதிர்ப்பு)ப் போராட்டத்திலே சேருகிறான். அந்தப் போராட்டம் அவனை முழுவதுமாக மாற்றி அமைத்து விடுகிறது, அதன் விளைவாக, அவன், தனியொரு மறவனாக மலர்ச்சி பெறுகிறான், புத்தம் புதிய கொள்கை களை வாழ்விலே கடைப்பிடிக்கும் இளைஞனாகவும் மாறிவிடுகிறான் இதுதான் இந்த நாடகத்தின் கதை.

ஒன்றுக்கும் உதவாதவனாக இருந்த நல்லமுத்து, தமிழகத்தில் நுழைந்த இந்தியைத் தடுக்கும் போரிலே ஈடுபட்டதால் தனிச்சிறப்புக்கும் உரியவனாக வளர்ந்துவிட்டான் என்பதே, இந்த நாடகத்தில் ஆசிரியர் வலியுறுத்தும் கருத்து. அதாவது ''இந்தி எதிர்ப்புக்கு அல்லது தமிழின் பாதுகாப்புக்குத் தயாராக இருப்பவனே சிறந்த தமிழன்'' என்று இந்த நாடகத்தின் மூலம் பிரச்சாரம் செய்கிறார் பாரதிதாசன்.

நல்லமுத்துவின் திருமணத்துக்கான ஏற்பாடுகளோடு நாடகம் தொடங்குகிறது. முதற்காட்சியில், வெள்ளையப்பனும் மண்ணாங்கட்டியும் தங்கள் மகனுக்குத் திருமணம் செய்விக்க முடிவு செய்கிறார்கள். இரண்டாவது காட்சியில், புரோகிதனை அழைத்து, பெண் எங்கே கிடைக்கும்? என்பதை அறியச் சோதிடம் பார்க்கிறார்கள், (புரோகிதன் சொன்னதை நம்பி. வெள்ளையப்பன் பெண்பார்க்கப் போகிறான், ஒரு பெண்ணையும் நிச்சயம் செய்கிறான்.) மூன்றாவது காட்சி அரசலூர் விதவை அம்மாக்கண்ணுக்கும் வெள்ளையப்பனுக்கும் ஏற்பட்ட தவறான தொடர்பை விவரிக்கிறது, நாலாவது காட்சிகள், ''சாதியில் ஏதும் தாழ்த்தி இல்லை, - சொத்தில் ஏதும் சுருக்கம் இல்லை'' (3) என்பதால், - தங்கள் மகனுக்கு அரசலூர் பெண் அமைந்தது பற்றி வெள்ளையப்பனும் மண்ணாங்கட்டியும் உவகை அடைகிறார்கள்.

இந்த ஏற்பாடுகளின் போது அங்கங்கேநல்லமுத்துவைப் பற்றிய பேச்சு வருகிறதே தவிர, அவன் இவைகளில் நேரிடையாகத் தொடர்புபடவே இல்லை. ஆகையால், இக்காலத்து இளைஞனாகிய நல்லமுத்து இதுபற்றி என்ன செய்யப் போகிறான்? என்று ஆவலோடு எதிர்பார்க்கிறோம். அய்ந்தாவது காட்சியில், அவனுக்கு மாமனாராக வரப்போகும் அரசலூர் இருசன் மூலமாக, முதன் முதலாக இந்தத் திருமணச் செய்தி நல்லமுத்துவுக்குத் தெரிய வருகிறது. அப்போதும், பொதுவாக இக்கால இளைஞனிடம் எதிர்பார்க்கக் கூடிய எந்த எதிரொலியும் நல்லமுத்துவிடம் உண்டாகவில்லை. நீ பெண்ணைப் பார்க்க வேண்டாமா? என்று இருசன் கேட்டபோது, ''அப்பா பார்த்தார் அதுவே போதும்'' என்கிறான்,

''பெண் உன்னைப் பார்க்க விரும்புகிறாளே'' என்ற போதும்'' அப்பாவைப் பார்த்தாள், அதுவேபோதும்'' என்று சொல்லிவிடு கிறான்: தான் ஈடுபாட்டோடு படித்து வந்த இராமாயணத்தையே ஆதாரமாகக் காட்டி, ''இந்த ராமாயணம் இயம்புவது என்ன? - அப்பா கருத்துக்கு அட்டி உண்டா? '' என்று கேட்பதன், - மூலம் அவன் எந்த நிலையிலும் அப்பாவுக்கே முழுமையாகக் கட்டுப் பட்டவன் (4) என்பதை மெய்ப்பிக்கிறான்.

அரசலூர் அம்மாக்கண்ணுவின் வலையில் சிக்கிய வெள்ளையப்பன், தன் மகன் நல்லமுத்துவுக்கு நிச்சயம் செய்தி ருந்த பெண்ணை அவள் மகனுக்கு மணம் முடித்து வைப்பதாக அவளி டம் உறுதியளிக்கிறான். அப்போது, '' என் மகன் பெரியதோர் இளிச்சவாயன்'' என்று நல்லமுத்தைப் பற்றிக் கருத்துத் தெரிவிக் கிறான். அம்மாக்கண்ணுவின் மேல் கொண்ட மோகமே அவனை அப்படிப் பேசச் செய்கிறது என்று நாம் நினைக்கிறோம். ஆனால், தந்தையாகிய வெள்ளையப்பனின் ஒழுக்கக்கேட்டைப் பற்றியும், தனக்குப் பேசிய பெண்ணை அவன் வேறொருவனுக்கு மணமுடிக்க ஏற்பாடு செய்ததைப் பற்றியும் கேள்விப்பட்ட போது நல்லமுத்து நடந்து கொள்வதைப் பார்க்கையில், அவன் உண்மையிலேயே இளிச்சவாயன்தான் என்று நாமும் முடிவுசெய்ய வேண்டியதாகி விடுகிறது.

அப்பாவின் நிலைமை இப்படி ஆகிவிட்டது. உன்னுடைய திருமணத்தை யாவது. நாம் ஒப்புக் கொண்டபடி முடிக்க வேண்டும் என்று அவனிடம் சொல்கிறாள் மண்ணாங்கட்டி அவனோ, திருமணவயதை எட்டிய காளையாக இருந்தும், - அப் பனின் ஒழக்கக் கேட்டைப் பற்றி எள்ளளவும் அக்கறை காட்ட வில்லை, அது அவன் உள்ளத்தில் உறைக்ககவே இல்லை.

அழைப்பிதழில் பேர்போடவும், பாதபூசைபண்ணிக் கொள்ளவும், திருமணத்துக்கு வருவோரை வரவேற்கவும் புரோகிதரை அழைத்து வரவும், அம்மி போடவும், அரசாணிக்கால் நடவும், அம்மன் பூசை போடவும், பொங்கல் வைக்கவும் அப்பா வேண்டுமே, அவர் இல்லாமல் திருமணம் எப்படி நடக்க முடியும்? '' (5) என்று அவன் அடுக்குகிற போதும், - பழமைப் பழக்கத் தழும்பு எந்த அளவுக்கும் அவனை அமுக்கியிருந்தது என்பது புலப்படுகிறது.

'' என்னரும் தந்தை இயம்பியபடியே இவரின் (இருசனின்) மகளை அவன் மணக்கட்டும் ''என்று (6) அவன் சொல்லும் போதோ, நல்லமுத்து பெரியதோர் இளிச்ச வாயன்தான் என்பதை நாமும் ஒப்புக்கொள்ள வேண்டியதாகி விடுகிறது.

தந்தையின் சொற்படி நல்லமுத்து பெரியதோர் இளிச்சவாயன், மேற்படி நிகழ்ச்சிகளுக்குப் பிறகு அவனுடைய தாயும், '' தன்மானம் இல்லாத் தடிப்பயல் என்மகன், உணர்ச்சி இல்லா ஊமை என்மகன்'' என்று (7) முடிவுசெய்து விடுகிறாள். இப்படி ஒன்றுக்கும் உதவாதவன் என்று ஒதுக்கப்பட்டவனுடை வாழ்விலே, - (தன்னிடம் இருந்த தமிழ்ப் பற்றினாலே) அவன் இந்தி எதிர்ப்பு இயக்கத்தில் ஈடுபட்ட நிகழ்ச்சி பெரிய மாறுதலை ஏற்படுத்தி விடுகிறது.

''தெருவில் என்ன பெரிய கூச்சல்? என்று பார்த்து வருவதற்காக வெளியே சென்ற நல்லமுத்து, அது இந்தி எதிர்ப்பு ஊர்வலம் என்று கண்டான், அதை நடத்தும் திராவிடர் கழகத்திலும் சேர்ந்துவிட்டான். இதற்குக் காரணம் அவனிடம் இருந்த தமிழ்ப் பற்று. அவன் அரசினரால் சிறைப்படுத்துப்பட்ட செய்தியை மண்ணாங் கட்டியிடம் சொல்லவந்த தமிழ்ப் புலவர் அமுதனார், - முன்பு நடந்துள்ள செய்திகளைக் கேட்டுவிட்டு, -

மடமையில் முழ்கி மடிகின்றான் அவன்,
தன்மானத்தைச் சாகடிக்கின்றான்,
மரக்கட்டை போல் வாழ்ந்து வந்தான் -
இந்த நிலைக்கெலாம் ஈன்றவர் காரணர்.
ஆயினும் தமிழ்ப்பற்று அவனிடம் இருந்தது,
திராவிடர் கழகம் சேர்ந்துவிட்டான்:
இனிமேல் அவனோ தனியொரு மறவன். (8)

என்று விவரிக்கிறார். புலவர் அமுதனாரின் கணிப்பு சரியானதே என்பதை அடுத்துவரும் நிகழ்ச்சிகள் மெய்ப்பிக்கின்றன.

சிறை சென்று மீண்ட பிறகுதான், இருசன் மகள் இவனை உயிராக எண்ணியிருப்பது நல்லமுத்துவுக்குத் தெரிகிறது, தன்மான உணர்வு தலையெடுத்த பிறகுதான், காதல் என்பதையே அவன் உணர்கிறான். முன்பு அப்பா இல்லாமல் எதுவும் நடக்க முடியாது என்று எண்ணி இருந்தான் அவன்:- தனக்கு நிச்சயித்த பெண்ணையே வேறொருவனுக்கு மணமுடிக்கத் தந்தை விரும்பி போதும், அப்படித்தான் நடக்க வேண்டும் என்று ஒப்பினான். இப்போதோ, - தன் தந்தையின் முகத்துக்கு எதிராகவே'' திருமணம் எனது விருப்பமாகும், ஒருத்தியும் ஒருவனும் உள்ளம் கலத்தல் திருமணம் என்க ''என்று (9) புதிய விளக்கம் கொடுக்கும் அளவுக்கு மாறிவிட்டான்.

மரக்கட்டை போல் கிடந்த ஒருவனை இந்த அளவுக்கு மாற்றிப் புதுக்கியது அவனுடைய தமிழ்ப்பற்றும் அதன் விளைவான செயல்களுமே என்று சொல்லுவதன் மூலம், தமிழ்ப்பற்று என்னும் கருத்தைப் பிரச்சாரம் செய்கிறார் பாரதிதாசன்.

இவ்வளவு வெளிப்படையாகப் பிரச்சாரம் செய்கிற இந்த நாடகத்தைப் படிக்கிற போது (அல்லது நடிக்கச் செய்து பார்க்கிற போது) இந்தப் பிரச்சார எண்ணத்தை மூடிப் பொதிந்து கொண்டு, சில பண்புகள் மேலோங்கித் தெரிகின்றன அவைகளா லேயே, இதற்கு, ஓர் இலக்கியப் படைப்பு என்ற தகுதியும் கிடைக்கிறது.

பிரச்சாரக் கருத்தை உள்ளடக்கி, படிப்பவர்களை இலக்கியச் சுவையிலேயே ஈடுபடுத்தும் பல உத்திகளைக் கையாளுகிறார் பாரதிதாசன். அந்த உத்திகளிலேயே, நாடகப்பாத்திரங்களுக்குப் பெயர் சூட்டியுள்ள முறையும் ஒன்று.

கதையின் நாயகனான நல்லமுத்துவின் தந்தை பெயர் வெள்ளையப்பன்; தாயார் பெயர் மண்ணாங்கட்டி; சாதகம் பார்க்க வருகிற புரோகிதன் பெயர் கொக்கு; நல்லமுத்துவின் மாமனாராக வருபவர் பெயர் இருசன்.

நிறைந்த சொத்துக்கு உரிமைபடைத்த ஓர் அப்பாவி வெள்ளை யப்பன். போதிய கல்வியறிவோ சிந்தனை முனைப்போ இல்லாத அப்பாவி (Simpleton) யாக இருப்பதால், எளிதிலேயே அம்மாக் கண்ணுவின் வலையில் அவன் விழுந்து விடுகிறான் அவன் மனைவி மண்ணாங்கட்டியும் பெயருக்கு ஏற்ப, மட்டியாகவே இருக்கிறாள். பையனுக்குப் பத்து வயது தொடங்கியதிலிருந்தே அவனுடைய திருமணத்தைப் பற்றிப் பேசத் தொடங்கிவிட்டாள் அவள். பையனுக்குத் திருமணம் பேசும் இடத்திலேயே தனக்கு இன்னொரு குழந்தை (குறிப்பாகப் பெண் குழந்தை) பிறக்குமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறாள். நாலணா கொடுத்துப் புரோகிதனைத் துரத்திவிடப் போன அவள், ''பெண் குழந்தை பிறக்கும்'' என்று அவன் சொன்னதும் அவனுக்கு ஒரு ரூபாய் கொடுக்கிறாள்.

மடைத்தலையில் ஓடுமீன் ஓட உறுமீன் பார்த்திருக்கும் கொக் குப்போல், அவர்களுக்கு ஏற்றபடியே பேசி, ஒரு ரூபாய் சம்பா தித்து விட்ட புரோகிதனுக்குக் கொக்கு என்ற பெயர் பொருத்த மானதே. இருசன் என்ற பெயரும் இருசு (நேர்மை) என்னும்

சொல்லின் அடியாக அமைந்து, நேர்மையான (Straight-Forward) ஓர் எதார்த்தநிலைப் பாத்திரமாக அவனைச் சித்திரிக்கிறது. நல்லமுத்து தன் தந்தை சொற்படி நடப்பவன் என்று தெரிந்த போது மிகுந்த மகிழ்ச்சி அடைகிறான் இருசன்; அந்தத் திருமணம் தடைப்பட்ட போது, ''திருமணம் விரைவில் செய்ய எண்ணி, எல்லாம் செய்தேன், எவர்க்கும் சொன்னேன்; என்னை ஊரார் என்ன நினைப்பார்? எப்படி வெளியில் இனிமேல் செல்வேன்?'' என்று(10) அவன் வாடுவதும் ஒரு நேர்மையாளனின் இயல்பான இதய ஓலமாகவே எழுகிறது.

கதையின் தலைவனுக்கு அமைந்த நல்லமுத்து என்னும் பெயரே, அவனுடைய பிறப்பிடப் பின்னணியைச் சிப்பியாக உருவகித்துப் பார்க்கத் தூண்டுகிறது; அவனுடைய பெற்றோரின் பண்பு, அவர்கள் இருவரும் சிப்பித் தோடுகளே என்பதை மெய்ப்பிக்கிறது. அவனுடைய வளர்ச்சியும் அவனை ஒரு நல்ல முழுமை பெற்ற முத்தாகக் காட்டுகிறது.

நாடகப் பாத்திரங்களின் பெயர்களிலேயே அவர்களின் பண்பு நலன்களைப் பொதிந்து வைத்து, அவைகளின் செயல்களால் அப் பண்புகள் வெளிப்படுமாறு செய்வது நாடகாசிரியர்கள் பரவலாகக் கையாள்கின்ற உத்தியே(11) அதை, அழகாக இந்த நாடகத்தில் கையாள்கிறார் பாரதிதாசன்.

பாத்திரங்கள் அனைத்துமே சீரான நடப்பியல் பண்போடு படைக்கப்பட்டிருப்பது இந்த நாடகத்தில் இலக்கியத் தகுதிக்கு மற்றொரு காரணம். வெள்ளையப்பனும் இருசனும் பொருள்வளம் உடைய குடும்பங்களின் ஆடவர்களில் இரண்டு விதமானவர்களைப் பிரதிநிதிக்கிறார்கள்.

தனிஉடைமைச் சமுதாயத்தில் ஒரே ஒரு மகனைப் பெற்று வைத்து, அவனுடைய திருமணத்தைப் பற்றிய கவலைக்கே இடமில்லாத விதத்தில் வாழ்பவன் வெள்ளையப்பன். பெரிய பொறுப்புக்களும் அறிவுத் தெளிவும் இல்லாத செல்வனாகிய அவன் வழிதவறிப் போவது இயல்பே. ஏழு பெண்களைப் பெற்று வைத்து,—'அய்ந்து பெண் பெற்றால் அரசனும் ஆண்டியாவான்' என்னும் பழமொழியின் நினைவாகவே வாழவேண்டிய கட்டாயத்தில் இருக்கும் இருசன் மிகுந்த பொறுப்புணர்ச்சியோடு வாழ்வதும் இயல்பே. முன்னவன், ஒழுக்கக் கேட்டில் ஈடுபட்டும் கூட, ஊரார் தன்னைப் பற்றி என்ன நினைப்பார்கள் என்று கவலைப்படவில்லை; பின்னவன், வெள்ளையப்பனால் தன் மகளின் திருமணம் தடைப்

பட்ட போது, ''இனிமேல் எப்படி நான் வெளியில் தலைகாட்ட முடியும்?'' என்று சாம்புகிறான். இவை, மேலே குறிப்பிட்ட சமுதாய அமைப்பில் இயல்பாக உருவாகக் கூடிய இரண்டு பாத்திரங்கள்.

இந்தச் சமுதாயத்தின் வேறு இரண்டு பாத்திரங்களாக மண்ணாங்கட்டியும் அம்மாக்கண்ணும் காட்சியளிக்கிறார்கள். தேவையான வசதிகளோடு சுகமாக வாழும் மண்ணாங்கட்டிக்குப் பிள்ளை பெறுவது, அந்தப் பிள்ளைக்குத் திருமணம் செய்விப்பது என்பவைகளுக்கு அப்பால் வேறு அக்கறைகளே இல்லை. திருமணத்தில் அவளுக்கு வேண்டியதெல்லாம், சாதி சரியாக இருக்க வேண்டும். சொத்து நிறைய இருக்க வேண்டும். சீதனமாகப் பணமும் சொத்தும் கிடைக்க வேண்டும் என்பவைகளே (12) அம்மாக்கண்ணு விதவை. இருசன் (தன் ஊர்க்காரியாகிய) அவளைப் பற்றிக் குறிப்பிடும் போது, ''அம்மாக்கண்ணை அறிவேன் நானும்!'' என்று (13) அழுத்தலாகப் பேசுவதிலிருந்து, அவளுடைய நடை ஏற்கனவே அவ்வளவு சரியில்லை என்பது தெரிகிறது. அவள், வெள்ளையப்பனைப் போன்ற ஓர் அப்பாவியைக் கைக்குள் போட்டுக் கொள்ள முனைந்ததும் நடப்பியலுக்கு ஒத்ததே.

நல்லமுத்து என்னும் நாயகப் பாத்திரத்தின் படைப்பிலேதான் சிறிது கற்பனை ஊடாடுவது போலத் தோன்றுகிறது. தனக்குத் திருமணம் என்னும் செய்தியைக் கேட்டுக்கூட எந்தவிதமான இதயக் கிளர்ச்சியும் அடையாத நல்லமுத்து அப்பட்டமான கற்பனைப் பாத்திரமாகவே தோன்றுகிறான். ஆனால், அவனுடைய வளர்ச்சிதான் நாடகத்தின் கதை என்பதை நாம் மறந்து விடக் கூடாது. நாடகத்தின் தலைமைப் பாத்திரம், எப்போதும், ''டெவெலப்பிங் கேரக்டர்'' அல்லது ''டைனமிக் கேரக்டர்'' என்று சொல்லப்படும் வளர்நிலைப் பாத்திரமாகவே இருக்க வேண்டும்(14) அந்த வளர்ச்சியைத் துல்லியமாகக் காட்டவே, நல்லமுத்துவின் பாத்திரம் முளைநிலையில் அறிமுகப்படுத்தப் படாமல் விதை நிலையில் அறிமுகப்படுத்தப் படுகிறது. இப்படி உன்மத்தனாக இருந்தவன், தன்னுடைய உரிமை உணர்வு விழிப்புற்றவனாக, புதியதோர் மறவனாக வளர்ந்தான் என்று காட்டும்போது ஆசிரியரின் நோக்குக்கு மிகுந்த வலிமை ஏற்படுகிறது அல்லவா?

இந்த நாடகத்தின் மற்றொரு முக்கியமான அம்சம் பேசாத பாத்திரங்கள். அம்மாக்கண்ணுவின் மகனும், இருசன் மகளாகிய மணப்பெண்ணும் கதை நிகழ்ச்சிகளோடு நேரிடையான தொடர்பு

உடையவர்களாக இருந்தும் அந்த இரண்டு பாத்திரங்களும், இந்த நாடகத்தில் ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை.

அம்மாக்கண்ணுவின் மகனுடைய நிலை மிகவும் இக்கட்டானது. அவன் வயது வந்த இளைஞன்; திருமணம் செய்ய வேண்டிய பிராயத்தான். அவன் பேசுவதானால், - ஒன்று, தன்னுடைய திருமணத்தைப் பற்றித் தன் தாயிடமே பேச வேண்டும்; - அல்லது அவளுடைய நடத்தையைப் பற்றி அவளிடமோ மற்றவர்களிடமோ பேச வேண்டும். இரண்டுமே நம்முடைய சமுதாயத்தின் பழக்கவழக்கப் பண்புகளோடு ஒத்தனவாகவே இல்லை. அவன் அப்படி ஏதாவது பேசியிருந்தால், கதையே திசை திரும்பியிருக்கும் என்பதையும் நாம் நினைவிற் கொள்ள வேண்டும்.

நல்லமுத்துவை, முதன்முறையாகப் பார்க்கவந்த (பெண்ணின் தந்தை) இருசன், திருமணத்துக்கு முன்பு ஒருமுறை தன் வீட்டுக்கு வருமாறு அவனை அழைக்கையில், -

என்மகள் ஒருமுறை உன்னைப் பார்க்க
நினைப்பதாலே நீ வரவேண்டும்.

என்கிறான்(15) 'அந்தப் பெண்ணுக்கு மாப்பிள்ளையைப் பார்க்க வேண்டும் என்ற ஆசை இருந்தது, - ஆனால் அதை வார்த்தைகளிலே அவள் வெளியிடவில்லை; - பெற்றோர்களே, அதை ஊகித்துக் கொண்டார்கள்' என்பது இதிலிருந்து தெரிகிறது. அந்தப் பெண் அப்படி எதையும் உணர்த்தவில்லை; இருசன்தான் அப்படிக் கற்பனை செய்து சொல்லி நல்லமுத்துவை அழைத்தான் என்று நாம் கருதுவதானாலும், - இந்தக் குறிப்பு (அந்தப் பெண் பேசாதே இருந்தமை) இருசனை ஒரு பொறுப்புள்ள தந்தையாக்கிக் காட்டவே பயன்படுகிறது. அவனுடைய பாத்திரம் பொறுப்புள்ள நேர்மையாளன் என்னும் தடத்திலேயே அமைந்தது என்பதை முன்பே பார்த்தோம். அதை உறுதி செய்யும் வகையில், அவனுடைய மகள் பேசாமலே இருந்தது மேலும் பொருத்தமே.

இந்த இரண்டு பாத்திரங்களையும் பேசாப் பாத்திரங்களாகப் படைத்ததால், கதையின் ஒருமைப்பாடு வலுவடைகிறது; அதன் எதார்த்தத் தன்மையும் கூடுகிறது. முக்கியமாக, அவர்கள் பேசாமல் இருந்ததால் அவர்கள் இருவரின் இயல்பும் எந்த விதத்திலும் பாதிக்கப்படவில்லை.

எந்த ஒரு படைப்பாவது இலக்கியமாகக் கருதப்பட வேண்டுமானால் அதன் பாவிகம் அல்லது அந்தப் படைப்பினால் படிப்

போர்க்குக் குறிப்பாக வழங்கப்படும் செய்தி ஒன்று கட்டாயம் வேண்டும். ஒரு குறிப்பிட்ட கருத்தைப் பிரச்சாரம் செய்வதற் காகத் தோன்றிய நல்லமுத்துக் கதை அப்படி ஒரு செய்தியை வழங்குகிறது என்பதே அதன் இலக்கியத் தகுதிக்கு மிக முக்கிய மான காரணம்.

ஒருவனுடைய வாழ்விலே எத்தனை வளர்ச்சியின்மையும் தெளிவின்மையும் இருந்தாலும், - சிறந்ததான ஏதாவது ஒன்றின் மேல் அவன் ஈடுபாடு கொண்டிருப்பானானால்,-அவன் நிச்சயமாகச் சிறப்புற்று விடுவான் என்பது இந்தக் கதை வழங்கும் செய்தி. இதையே புலவர் அமுதனார் மூலமாக, மிகத் தெளிவாக எடுத்து விளக்குகிறார் ஆசிரியர் :

''மடமையில் மூழ்கி மடிகின்ருன் அவன்;
தன்மானத்தைச் சாகடிக்கின்றான்; -
ஆயினும் தமிழ்ப்பற்று அவனிடம் இருந்தது
. . . .
இனிமேல் அவனோ தனியொரு மறவன்!''16

என்று அமுதனார் அறுதியிட்டுச் சொல்லுவதில், இந்தச் செய்தியே மிளிர்ந்து தோன்றுகிறது; கதையின் முடிவும் இதை முழுமையாக வலியுறுத்தி உறுதி செய்கிறது.

''எந்த இலக்கியமும் கால, இடச் சுற்றுச் சார்புகளாலேதான் உருவாகிறது; இலக்கியம் காட்டும் வழியிலேதான் மற்றெல்லாம் நடக்கின்றன என்று இலக்கிய ஆர்வலர்கள் சொல்லிக் கொண்டா லும், - அரசியல் வழிகாட்டுகிறது, கலை அதற்கு ஏற்றபடி மாறிக் கொள்ளுகிறது என்பதே உண்மை'' என்கிறார் அறிஞர் லூ சுன்.17 இங்கேயும் அரசியலே ஒரு கருத்தைக் கொடுத்தது; நடப்பியலுக்கு ஒத்த பாத்திரப் படைப்பினாலும், ஒவ்வொரு பாத்திரத்தின் தன்மைக்கும் ஏற்ப அதை (பேசியும் பேசாமலும்) செயற்பட வைத்ததாலும், வாழ்வுக்குத் தேவையான இலட்சியம் ஒன்றைக் குறிப்பாக உணர்த்தியதாலும், - அந்தக் கருத்து ஓர் இலக்கியப் படைப்பாக உருவங் கொள்ள முடிந்தது. எனவே, நடப்பியலுக்குப் பொருந்திய பாத்திரங்களை உருவாக்கி, குறிப் பிட்ட இலக்கிய வகைக்கு ஏற்ற உத்திகளையும் கையாண்டு நல்ல தொரு பாவிகத்தைத் தெளிவாக எடுத்து உணர்த்தினால், எந்தப் பிரச்சாரமும் இலக்கியமாகி விடும் என்பது தெளிவாகிறது.

மேற்கோள்கள்.

1. சிவதாணு, டி. என். (தொகுப்பு) :
நாடக உலகில் அண்ணா, சென்னை (1970), பக்கம் 45

2. சாமி சதம்பரனார் : இலக்கியம் என்றால் என்ன ?,
சென்னை (1963), பக்கம் 69

3. பாரதிதாசன் கவிதைகள் (3), சென்னை (1974),
பக்கம் 126

4. மேற்படி நூல், பக்கம் 129

5. மேற்படி நூல், பக்கம் 136

6. மேற்படி நூல், பக்கம் 137

7. மேற்படி நூல், பக்கம் 137

8. மேற்படி நூல், பக்கம் 140

9. மேற்படி நூல், பக்கம் 142

10. மேற்படி நூல், பக்கம் 133

11. சாலை இளந்திரையன் : புதுத்தமிழ் முதல்வர்கள்,
சென்னை (1972), பக்கம் 79 - 80

12. பாரதிதாசன் கவிதைகள் (3), பக்கம் 126

13. மேற்படி நூல், பக்கம் 134

14. Joseph T. Shipley : Dictionary of World Literary
terms, London (1970), P. 42

15. பாரதிதாசன் கவிதைகள் (3), பக்கம் 129

16. மேற்படி நூல், பக்கம் 140

17. David Craig (Ed) : Marxists on Literature,
Harmondsworth (U. K.) 1975, P. 396

(இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்றத்தின் ஒன்பதாவது கருத்தரங்கில் வழங்கிய முன்னோட்டக் கருத்துரை.)

பழந்தமிழ் நூல்களில் விலங்கினத்தின் காதற்பண்புகள்.

தொகுப்பு :
சுவாமிநாத காசிநாதன்.

அமிழ்தினும் இனிய நம் அருந்தமிழ் மொழியில் ஆழ்ந்த கருத்துடைய அழகிய இலக்கியங்கட்குக் குறைவில்லை. இப்பழந் தமிழ் நூல்களில், விலங்குகள், பறவைகள், ஊர்வன, நீர் வாழ்வன என்ற நான்கு பகுப்பான உயிரினங்களைப் பற்றிப் புலவர் கூறியுள்ளார்கள்.

பழங்காலத்தில் மலைவளமும், காட்டு வளமும், கடல் வளமும் இயல்பு கெடாது சிறந்து விளங்கின. மரஞ்செடி கொடிகள் இயற்கை எழிலோடு வளர்ந்து ஓங்கிச் செறிந்திருந்தன. அங்கு காட்டு விலங்களும், பறவைகளும் அச்சமின்றி வளர்ந்து சிறந்தன, விரும்பியாங்கு விளையாடின. ஏற்றூர்க்கு மாற்றாது கொடுக்கும் வள்ளல்களை நாடித்திரியும் பழம் புலவர்கள் அவ்வுயிரினங்களின் இயல்புகளை ஊன்றி நோக்கி இலக்கியங்கட் கிடையிடையே, பொன்னணிக்கிடையில் வைத்திழைத்த விலைவரம்பறியா நன் மணி போல், அழகுறக் கூறியுள்ளனர். விலங்கினத்தின் காதலுணர்ச்சி யைப் பற்றி நம் பொய்யில் புலவர்கள் கூறிய கருத்துக்களைப் பார்ப்போம்.

யானையின் காதல் : தன்னலமற்ற தன்மைதான் காத லின் உண்மைத் தன்மையாகும். ஆடவர்க்கு முன் உணவளித்து பெண்டிர் பின்பு உண்பதே தமிழ் நாட்டின் மரபு. இது பெண்டிரின் தன்னலமற்ற அன்பையுணர்த்தும்.

யானை காதலுணர்ச்சியில் மிக்கது. ஓர் பாலைவனம். அங்கு தண்ணீர் கிடைப்பது சிரமம். அங்கு ஒரு களிறும், பிடியும், கன்றும் எப்படியோ சென்று விட்டன. நீர்வேட்கையால் அலைந்து திரிந்து கடைசியில் நீருள்ள ஓரிடத்திற்கு வந்து சேர்ந்தன. கன்று முதலில் நீர் பருகியது. எஞ்சியுள்ள நீர் சிறிதளவேயுள்ளது. நீர் வேட்கையில், பிடிக்கும், களிறுக்கும் வேறுபாடில்லை. ஆனாலும் பிடியானது களிறுதான் முதலில் அருந்த வேண்டுமென்று வாளா யிருக்கிறது. இது பெண்மையின் இயல்பல்லவா ? ஆனால் களிறு, பிடிக்குத்தான் நீர் வேட்கை அதிகம் என்று கருதி அதனை முன்

அருந்தும்படி செய்யும், இக்களிற்றின் தன்னலமற்ற தகவுடைக் காதலை கபிலர்

துடியடிக் கயந்தலை கலக்கிய சின்னீரைப்
பிடியூட்டிப் பின்னுண்ணுங் களிறெனவு
முரைத்தனரே. (கலி - 10)

அழகான தோற்றத்தையும், பருவத்தையுமுடைய ஒரு பெண் யானை கன்றோடு நிற்கிறது. பக்கத்திலுள்ள வேங்கை மரத்தில் ஒரு தேன் கூடு இருப்பதை ஆண் யானை பார்த்தது. தேனீக்களை விரட்டி, அந்தப் பொன் போன்ற தேன் இருலைத் தன் துதிக்கையிலெடுத்துக் கவளமாக தன் காதலிக்கு ஊட்டுகின்ற காட்சியைத் தலைவன் குறிப்பால் அறிகின்றான். ஆறறிவுடைய மக்கள் ஐந்தறிவையுடைய யானையின் காதலுணர்வைக் கண்டு மெச்சுகிறார்கள் என்றால், யானையின் காதலுணர்ச்சி எத்தகையது! ''காதல் மடப்பிடி'' என்று அப்பரடிகள் கூறுகிறார்.

சங்க நூல்களில் ஆண் யானை, பெண் யானைக்கு அன்பு பாராட்டுவதையும், பெண் யானைக்கு உணவாக இலைகள், மூங்கில் முளைகள் ஆகியவற்றைத் தருவதையும் கூறுகின்றன. ''மடப்பிடி தழுவிய யானை, அமர்துணை தழுவிய யானை, பிடி பசிகளைந்த யானை'' என்றெல்லாம் ஆண் யானையின் அன்புப் பாராட்டலைப் பல பாடங்களில் கூறியுள்ளனர்.

புலி: வீரமும், வலிமையும் மிக்க பிராணி. அது தன்னல மற்ற காதலுணர்ச்சியிலும் மேன்மையாக விளங்குகின்றது. பெண் புலி கருவுற்றுள்ளது. அது வயவு நோயால் பசிமிக்கு வாடுகிறது. அவ்வாட்டத்தைக் கண்ட ஆண் புலி வேட்டைக்குச் செல்கின்றது. பகல் முழுவதும் திரிந்தும் யானை கிடைக்கவில்லை. யானையின் தசை, கருவுற்றிருக்கும் பெண் புலியின் வயா நோய்க்கும், கரு வளர்ச்சிக்கும் ஏற்றதானது என்று அலைந்து திரிகிறது. இருள் சூழ்ந்த காட்டில், இரவில் ஒரு யானையைக் கண்டு அதனை வீழ்த்து கிறது. வீழ்த்திய யானையை எடுத்துச் செல்ல வழி தெரியாமல் விழித்தது. அங்கு ஒரு பாம்பு மணியை உமிழ்ந்து விட்டு, அந்த ஒளியில் இரை தேடிக் கொண்டிருந்தது. அம் மணியொளியில் வழியறிந்த புலி, தான் கொன்ற யானையைப் பெண் புலி இருக்கு மிடத்திற்கு இழுத்துச் செல்கிறது.

பிணவின் வயவுப் பசி களைஇய
இருங்களி றட்ட பெருஞ்சின வுழுவை
நாம நல்லராக் கதிர்பட வுமிழ்ந்த
மேய்மணி விளக்கில் புலர வீர்க்கும்

(அகநா. 7-2)

தான் கொன்ற யானையைத் தான் அருந்தாது பெண் புலியின் வயவு நோய் தீர, இருளில் நச்சுப் பாம்பின் மணி ஒளியில் அஞ்சாது இழுத்துச் செல்லும், ஆண் புலியின் தன்னலமற்ற காதலுக்கு ஈடுண்டோ?

மான்: மான்கள் பொதுவாக மந்தையாக வாழும். ஒரு மந்தையில் 20 முதல் 30 வரை காணப்படும். பாலுணர்ச்சி தோன்றும் காலத்தில் ஆண்கள், பெண் மானைக் கவர்வதற்காக தங்களுக்குள் முட்டிப் போர் புரியும். போரில் வெற்றி பெற்ற ஆண் மான், பெண் மானுடன் மந்தையை விட்டு விலகித் தனித்து வாழும். குட்டிபோடும் வரை தனித்து வாழும். கார் காலத்தில், நடு இரவில் இச்சேர்க்கை கூடுமாதலால், தேரை அதிக ஒலி எழுப்பும் அளவில் ஓட்டாதே என்று பாகனுக்குத் தலைவன் கூறியதாக அகப்பாடலில் கூறப்படுகிறது.

கலை மானும், பிணையும் மிக்க காதலுடையன. கலை மானை புலி கொன்றுவிட, பிணை சிறிய குட்டியை ஈன்றிருந்தமையால், அக் கலைமானோடு உயிர் நீக்கவில்லை. கன்றைக் காப்பாற்றும் பொருட்டு போக உணர்ச்சியை மிகுதிப்படுத்தும் பூக்களைப் புசிக்காமல், வேளையின் வெண்பூவையுண்டு வாழுமாம்.

அருமருப் பெழிற்கலைப் புலிப்பாற் பட்டெனச்
சிறுமறி தழீஇய தெறிநடை மடப்பிணை
பூளை நீடிய வெருவெரு பறந்தலை
வேளை வெண் பூக் கறிக்கும் (புறநா. 28)

இது மக்களுள் கணவனை இழந்த பெண்டிர் கைம்மை நோன்பு மேற்கொண்டு வேளைக் கீரையை வேகவைத்து புசிக்கும் நிகழ்ச்சிக்கு ஒப்பாவதை உணரும் பொழுது பெரும் வியப்பு எய்துகிறோம்.

குரங்கு: குரங்கினத்தில் ஒருதார மணமும், பலதார மணமும் நிலவுகின்றது என்பர்.

மந்திக் காதலன் முறிமேய் கடுவன்

(ஐங்குறுநூறு - 276)

மந்திக் கணவன், கல்லாக் கடுவன்

(ஐங்குறுநூறு - 274)

ஐங்குறு நூற்றிலும், பிற சங்க கால நூல்களிலும் பெண் குரங்கு, கணவனுடன், காதலுடன் இருப்பதாகக் கூறுவதைக் காணலாம். ஆனால் பெரும்பாலும், குரங்குகள் ஒருதார மணவாழ்க்கையை (Monogany)ப் பின்பற்றுவதில்லை.

ஓர் இளமையானதும், வலிமையானதுமான ஆண் குரங்கு இறந்தவுடன், கணவனை இழந்த கைம்மை நோன்போடு வாழ விரும்பாத பெண் குரங்கு, தன்குட்டியைக் காப்பாற்ற வேண்டும் என்ற விருப்பமுமில்லாமல், அந்தக் குட்டியைத் தன் இனக் குரங்கினிடம் கொடுத்துவிட்டு, உயர்ந்த மலை உச்சியின்மேல் ஏறிப் பாய்ந்து உயிர் விட்டது.

கருங்கட் டாக்கலை பெரும்பிறி துற்றெனக்
கைம்மை யுய்யாக் காமர் மந்தி
கல்லா வன்பறழ் கிளைமுதற் சேர்த்தி
ஓங்குவரை யடுக்கத்துப் பாய்ந்துயிர் செகுக்கும்
சாரல் நாட (குறுந் - 69)

அன்றில் : இது காதல் உணர்ச்சியில் சிறந்த பறவை. பனை மரத்தின் வளைந்த மடலில் கூடுகட்டி வாழும். ஆணும், பெண்ணும் இணைபிரியாதிருக்கும் இயல்பினையுடையது.

மன்றப் பெண்ணை வாங்குமடற் குடம்பைத்
துணை புணர் அன்றில் (நற்றி - 303)

ஆணைவிட்டுப் பெண்ணோ, பெண்ணைவிட்டு ஆணோ பிரிந்தால், அப்பிரிவாற்றலால் மிக வருந்தும். பிரிந்து சென்ற ஆண் அன்றில் வருவதற்கு சிறிது நேரமானாலும், மூன்று முறை பெண் அன்றில் உரத்த குரலில் கூவிப் பார்த்துவிட்டு உயிர் நீத்துவிடும்.

. . . . பெண்ணைத் தோடு மடலேறி
கொடுவாய்ப் பேடைக் குடம்பைச் சேறிய
உயிர்செலக் கடைஇப் புணர் துணைப்
பயிர்தல் ஆனுப் பைதலங் குருகே. (நற்றி - 338)

இது போலவே, பெண் அன்றில் கூட்டை விட்டுப் போய் திரும்பிவர நேரமானல், ஆண் அன்றில் கூட்டிலிருந்து வெளிவந்து, பனை மரத்தின் உயர்ந்த மடல் மேல் ஏறி பெண் அன்றிலை உரக்க கூவி அழைக்கும்.

மனைசேர் பெண்ணை மடிவாய் அன்றில்
துணை யொன்று பிரியினும் தூஞ்சாகாண்
(அகநா - 50)

மகன்றில் : இதுவும் அன்றிலைப் போன்ற காதலுணர்ச்சி மிகுந்த பறவையாகும். இது நீர் வாழ் பறவை. இவைகளும் ஆணும், பெண்ணும் இணைபிரியாது வாழும் இயல்புடையன இரண்டு மகன்றில்களில் ஒன்று ஒரு மலரைத் தாண்டி சிறிது பிரிந் திருந்தாலும், அம்மலரினல் ஏற்பட்ட பிரிவை ஓராண்டுக் காலம் பிரிந்ததுபோல் எண்ணி மிகவும் வருந்துமாம்.

பூவிடைப் படினும் யாண்டு கழிந்தன்ன
நீருறை மகன்றில் புணர்ச்சி போல (குறுந் - 57)

குறுங்கால் மகன்றி லன்ன
உடன் புணர் காதல் (ஐங்குறு - 381)

உடன் புணர்தலுக்கு மகன்றிலையே எடுத்துக் காட்டாக கொண் டுள்ளதை அறியவும்.

அன்னம் : அன்னப் பறவை காதலுணர்ச்சி மிக்கது தலைவியைப் பிரிந்திருந்த தலைவன் தலைவியோடு கூடிய மகிழ்ச்சிக்கு காதல் மிக்க அன்னப் பறவையின் புணர்ச்சியை உவமையாகக் கூறியுள்ளார்.

மென்னடைப் பேடை துணைதாத் தற்சேர்ந்த
அன்னவான் சேவற் புணர்ச்சி போல் (கலி - 147)

அன்னங்கள் மனமகிழ்ந்து கூடும் அன்புறு புணர்ச்சி காலத்தில் உதிர்கின்ற மெல்லிய இறக்கைகளைச் சேர்த்து வைத்து, மெல்லிய நல்லணையமைப்பதுண்டு.

துணைபுணர் அன்னத் தூநிறத்தூவி
இணையணை மேம்படப் பாயணையிட்டு. (நெடுநல்)

மனையுறைக்குருவி : மக்கள் வாழும் வீட்டில் கூடு கட்டிக் கொண்டு வாழ்தலினல் இதனை மனையுறைக்குருவி என்பர். ஒரு குருவிச் சேவல் தன் வீட்டை விட்டுச் சென்று, மற்ரெரு கூட்டி லுள்ள பெடையோடு தங்கி வந்தது. அதன் தீய ஒழுக்கத்தை அறிந்தஅதன் பேடை, தன் பிள்ளைகளுடன் சேர்ந்து கொண்டு, அதனைத் தன் கூட்டினுள் நுழைய விடாமல் தடுக்கின்றது. தான் செய்த தவறினை உணர்ந்த குருவிச் சேவல், செய்வதறியாமல் மழை யில் நனைந்த வண்ணம், கூட்டின் வெளியில் மன்னிப்புக் கோரிய வண்ணம் நின்று கொண்டிருக்கின்றது. அந்நிலையைக் கண்டு மனம் பொருத பெண் குருவி, தன் பழைய கால காதல் நினைவுகளை உணர்ந்து, தன்னிடத்து வருமாறு கூட்டிற்குள் அழைக்கிறது. இக்குருவியின் ஊடலையும், கூடலையும் உற்று நோக்கிய புலவர்

உள்ளிறைக் குரீஇக் காரணற் சேவல்
பிறபுலத் துணையோ டுறைபுலத் தல்கி
வந்ததன் செவ்வி நோக்கிப் பேடை
நெறிகிளர் ஈங்கைப் பூவி னன்ன
சிறுபல் பிள்ளையோடு குடம்பை கடிதலின்
துவலையின் நனைந்த புறத்த தயலது
கூரலிருக்கை யருளி நெடிது நினைத்து
ஈர நெஞ்சிற் றன்வயின் விளிப்பக்
கையற வந்த மையன் மாலை (நற்றி - 181)

நண்டு : நண்டின் தன்னல மற்ற காதல் நிகழ்ச்சியை இளநாகனர் நமக்கு காட்டுகின்றார்.

அகல் இலைநாவல் உண்துறை உதிர்த்த
கனிகவின் சிதைய வாங்கிக் கொண்டுதன்
தாழைவேர் அளை வீழ்த்துணக்கு இடும்
. . . . அலவன் (அகநா - 380)

மக்கள் நீராடும் துறையிலுள்ள நாவல் மரத்திலிருந்து ஒரு பழம் உதிர்ந்து விழுகிறது. அதனை அழகு சிதறுமாறு ஒரு நண்டு தன் கால்களால் பற்றி இழுத்துச் சென்று, தாழையின் வேரின் கீழுள்ள அளையில் தங்கியுள்ள தன் வாழ்க்கைத் துணையாகிய பெண் நண்டிற்கு கொடுக்கும். இதனைத் தலைவன் தோழிக்குக் காட்டி இக் காதல் காட்சி நல்வினையுடையது என்று புகழ்ந்ததாக ஒரு புலவர் கூறியுள்ளார்.

ஆமை : பெண் யாமை முட்டையை மணலில் குழி தோன்றி அதில் ஈனும். அதனை கணவனாகிய ஆண் யாமை பாத்துக் கொண்டே இருந்தது. தன் முட்டை என்ற காதல் உரிமையால். அம் முட்டையிலிருந்து குஞ்சு வரும் வரையில், யாதும் இடையூறு நிகழாத வண்ணம், அவ்விடத்தை விட்டு நீங்காது பாதுகாக்கின்றதாம், ஆண் யாமை. யாமையின் காதல் நிலை நன்கு புலப்படுதல் காண்க. இதனை

. . . . . . நிறைச்சூல் யாமை மறைத்தீன்று புடைத்த
கோட்டுவட்டு சருவின் புலவுநாறு முட்டை
பார்ப்பு இடனாகும் அளவை பகுவாய்க்
கணவன் ஓம்பும் கானல் (அகநா - 160)

இயற்கை வருணனை என்பது மலைகள், நதிகள், சோலைகள் ஆகிய உயிரற்ற காட்சிகளைப் படம் பிடித்துக் காட்டுவதோடு நின்று விடுவதில்லை. உயிருள்ள பிராணிகளையும், அவற்றின் பண்புகளை யும், வாழ்க்கை முறையினையும் கூர்ந்து நோக்கி ஆராய்ந்து பார்த்துத் தகுந்த இடங்களில் அவற்றை மனித இயல்புகளோடு ஒப்பிட்டு சுவைபட அழகுடன் கூறுவதில் தமிழ் இலக்கியங்கள் தலைசிறந்து நிற்கின்றன.

மார்கழி இதழின் தொடர்ச்சி

குறளில் வீட்டியல்

K. சோமசுந்தரம், B.A., B.L.,

தஞ்சை.

உலகில் அறிந்து இறையுணர்வோடு, ஐம்புலன்களால் ஈர்க்கப் பட்டு அல்லலுற்றழியும் மயக்கினை நீக்கி, வீட்டின்பத்தை வருவித்துத் துய்க்க, பெருநாவலர் கோன் செவியறிவுறூவாக பல உளவு களைக் குறணூலில் செப்பி, மனப்பழக்கத்தாலும், சொற்பழக்கத் தாலும், செயற்பழக்கத்தாலும் சிறந்தது பயிற்றல் மூலம், அறிவு ளறிவை அறிவதைத் தெளிய வைத்தருளிய அருமையும் அள விறந்த பெருமையும் உள்ளத்தால் உணர்ந்து அனுபவிக்க வேண்டி யனவேயன்றி எடுத்துரைப்பதற்கு ஏலாதது. இருந்தாலும் மனித வாழ்வில் புனித வீட்டின்ப நெறியினைப் பெற வள்ளுவர் இறை யுணர்வோடு இறைவனது மாணடியைச் சார முயலும் அளவுக்கு மக்கள் மூலம் உணர்ந்தாலே அஃதே பெரும் பேறெனக் கொண்ட னர்; இஃதோடமையாது சாகாக் கலையாகிய மரணமிலாப் பெரு வாழ்வில் வாழ்ந்திட வகையினையும் குறிப்பாகக் குறணூலில் உணர்த்தியருளினர். இன்குறள் வெண்பாவால் சிறந்திடும் முப் பாலின் மெய்ம் மொழிப் பொருளின் உண்மையினை உணர்ந்த வள்ளலாரும் தேவர் குறளில் முதல் அதிகாரத்தில் சாகாத கல்வி யைக் குறித்துச் சொல்லியிருக்கிறது. அதைத் தக்க ஆசிரியர் மூலமாய்த் தெரிந்து கொள்ளலாம்' என உபதேசப் பகுதி (64) யில் பரிந்துரைத்த அனுபவ வாக்கு ஈண்டு, நினைப்பதற்குரியது. அதனை உணரவல்லார் உணர்க. மற்றும் துறக்கும் உள்ளத்தில் வீட்டின் பக் களிப்பினை நல்க, வள்ளுவத் தேவர் ஐம்புலன்கள் வழியாலும் அனுபவித்து, பேரின்ப மகிழ்ச்சியினை யெய்திப் பயனடையும் அளவுக்கு, வாழும் மக்களுயிர்களிடம் இறைவனை எளிதாக அடை யச் செய்து விட்டார். (without shutting the door of senses, Valluvar caused the delights of sight, hearing and touch to bear the God's delight). மற்றும் அரிதுணர் பொருளாகிய சிறப்பென்னும் செம்பொருட்டுணிவை, சிந்தனைக்கு விருந்தளிக்கும் முறையில், முருகுணர்ச்சியினை வளர்க்கும் வழக்கியலாணைக்குரிய குறட் கவிதைத் துறையைத் திருவள்ளுவர் பயிற்சிக் களமாகவும் அமைத்ததை உன்ன அவர் தம் உள்ளமும் குறிக்கோளும் நன்கனம் விளங்கும்.

முடிப்பக்கூறின், திருவள்ளுவர், தொல்காப்பியரது பாடாண்டிணை வகையில், கடவுளைப் பண்பியாக வாழ்த்தி, உயிர்களுக்கும் இறைக்கும் உள்ள உறவை விளக்கி, இறைவனது இயல்பினையும் பெருமையினையும், உயிர்களின் இயல்பினையும் சிறுமையினையும்; இறைவழி நிற்கும் விதியாகிய ஊழ்வினை உயிரோடு கூடி நிற்பதையும், உயிர் இறையருளைச் சார்ந்தபோது அது தானே அகலுவதையும் எடுத்துக்காட்டி, மக்களுயிர்கள் சிறுமையின் நீங்கி சிறப்பு முறையில் தம் உண்மை நிலையினை உணர வேண்டி, அவ்வுயிர்களுக்குரிய வீட்டின்பத்தை நுகரும் பேற்றுரிமையினையும் பற்றற்ற பண்பாட்டினையும் வழங்கும் அருள் வள்ளலாய்த் திகழ்வாராயினர். தெய்வப் புலவர் திருவள்ளுவர் கடவுளின் முழுமுதற்றன்மையின் உண்மையினையும் பதிஞானத்தையும், உள்ளக்கருத்தால் உணரும் வகையாலே, சமயக்காழ்ப்பும் வேறுபாடுகளும் தோன்றுவாறு யாவரும் ஏற்றுக் கொள்ளும் முறையில் தெளிய வைத்துள்ளார்.

மற்றும் இறைக்கும் உயிருக்கு முள்ள உறவை தமிழ் எழுத்துக்களின் அமைப்பு மூலம் புலப்படுமாறு விளக்கி, உயிரும் இறையும் உயிர் மெய்யெழுத்துப் போன்று ஒன்றுகும் நிலையினையும் வள்ளுவர் நன்குணர வைத்துள்ளார். எழுத்துக்களுக்கெல்லாம் 'அ' எனும் நாதவுயிர், வாழும் 'கரம்' என்ற உடலைப் பற்றுக் கோடாகக் கொண்டுள்ளது போன்று, படைப்புப் பொருள்கள் யாவும் 'ஆதி பகவனை' ஆதாரமாகக் கொண்டுள்ளதால், ஆதி 'சக்தி' யையும், 'பகவன்' அந்த முற்ற சிவத்தையும் குறிக்குமென்பது ஆசிரியரது கருத்துபோலும், மற்றும் எழுத்துக்களின் காரணமாக இறை பொருளாகி விளங்குதலை, ஆதி அகரம் ஆதி பகவனுக்கு எடுத்துக் காட்டாக நிற்றல் மூலம் வள்ளுவர் தெளியக்காட்டி, மலமற எழுத்தறிந்து தம்மையுணர்வார், தம் புலன்களை இறைபால் தோய வைத்து இன்பால் ஈடுபடும் வகையாலே வீடு பெறும் இயல்பினையும் உன்னவைத்தார்.

மாறிப் பிறந்து வரும் மக்களுயிர்கள் எவ்வாறு சீலம், நோன்பு, செறிவு, அறிவு ஆகிய நானெறிப் பண்பால், மலப் பிணிப்பினை அகற்றி மாறிலா வீட்டின்ப நலத்தை எய்துவார்களென்பதை, செந்நாப் போதார் சாற்றி, பிறவித்துன்பத்தினின்றும் விடுபடுதலே வீடென்பதையும் நுணுக்கமாக அருளினர். மற்றும் வள்ளுவப் பெருந்தகை, தமிழின்பப் பண்பாட்டின்படி, இறை, உயிர், தளை, வீடு என்ற பொருள்களின் சிறப்பியல்பினை தொடர்புபடுத்தித் தம் தெய்வ நூலில்,

முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப் படும் (388)

என்ற குறள் வழி, மக்களுயிர்களால் எளிதே உணர்தற்குரிய இறை யுண்மையினையும் இயல்பினையும் நிலைநிறுத்தி, 'உடம்பொடுயிரிடை நட்பு' (388) என்பதின் மூலம் உயிர் நிலையினை விளக்கி, பாசமாம் பற்றின் நீக்கமே அணியெனக் கொள்ளும் உயிர், அடையும் வீட்டு நிலையினை 'பற்றற்ற கண்ணே பிறப்பறும்' (349) எனவும், 'அவா நீப்பின் அந்நிலையே பேரா இயற்கை தரும்' (370) எனக்கூறி, துறக்க வூறும் மெய்ஞ் ஞானத்தைத் துணியத் துணிய, வீட்டின்பம் தானே வந்தெய்து மென்பதையும் நன்கு புலப்படுத்தியுள்ளார்.

வாழும் மக்களுயிர்கள் பொதுவாக ஐம்புலன்களின் வழி உலகியலை அறியுமேயல்லாது தன்னையும் தன் தலைவனையும் அறியாததால், புலன்களை அடக்கி வெல்லும் வழியில் வேண்டுதல் வேண்டாமையிலானாகிய இறைவனைச் சார்ந்தால், அவனருளாலே, அறியாமையினின்று பிறக்கும் விருப்பும் வெறுப்பும் அதனுள் வினையும் வினையும் அறவே யில்லையாகி, இடும்பை அருகி மெய் யின்பம் பெருகிட, வீட்டிற்கு வாயிலாகிய இறை ஞானம் இயல் பாகத் தோன்றும் வகைகளைப் பற்றி வள்ளுவர் தம் குறட்பாக்களில் பொறித்த குறிப்புகள் யாவும் யாவரும் பின் பற்றிப் போற்றும் தகையன. இஃதோடமையாது வீடு பேற்றிற்கே எளிய வழியினை வகுத்துக் கொண்ட வள்ளுவர், மக்கள் தம்மின்வேருக உலகினைக் காண்டலையும், உலகையும் மனத்தையும் ஒன்று படுத்தும் புலன் களை அடக்கி அவற்றை நல்வழியில் செலுத்தும் முறையில் இறை யினை நாடி யுணர்ந்து அந்தமில் இன்பமாய அழிவில் வீட்டின் பத்தை வேண்டி அதனில் அழுந்தி அனுபவித்தலையும், அதற்கு முயலும் வகையினையும் குறிப்பாக விளக்கி, இறை யுண்மையில் உறுதி கொண்டு திகழுமாறு உள்ள உணர்ச்சியினையும் ஊக்கி யுள்ளார். நல்வாழ்க்கைத் துறை நெறிக்குரிய வழக்கியலாணை இனைத்தென விளக்க, வள்ளுவர் இறைபால் திருவருளை உன்னி மக்களுயிர்கள் தொழுகையாலே அத்துவிதமாக ஒன்றிக்கூடிக் கலப்பதாகிய வீடு பேற்றின் பொருண்மையினையும் அருமைப் பாட்டினையும் நுட்பமும் ஒட்பமும் திட்பமும் சிறக்க நிலையிட்டுரைப் பதில் உண்மைப் பொலிவும் அழகும் மிளிர்தல் கண்கூடு.

வீட்டியலின் தத்துவ உட்பொருளை வள்ளுவர் தம் குறணூலில் உள்ளாமலில்லை; இலை மறை காயாகச் சுட்டாமலுமில்லை. பிறப்பு இவ்வுலகில் எய்துதலால் இவ்வுலகச் சிறப்பு யார் மாட்டும்

(தொடரும்)

பதிப்பாசிரியர் குழு

1. திரு. அரங்க. வே. சுப்பிரமணியம், பி. ஏ.,
அமைச்சர், கரந்தைத் தமிழ்ச் சங்கம்,
பொழிற்றெண்டர்.

2. திரு. எஸ். பெத்தண்ணன், தலைவர்,
கரந்தைத் தமிழ்ச் சங்கம்

3. திரு. சித்தாந்த கலாநிதி ஔவை. சு. துரைசாமி பிள்ளை,
தமிழ்ப் பேராசிரியர், மதுரை.

4. திரு. வித்துவான். க. வெள்ளைவாரணனுர்,
துணைப் பேராசிரியர், அண்ணுமலைப் பல்கலைக் கழகம்.

5. திரு. வித்துவான். பி. விருத்தாசலம், எம். ஏ.,
முதல்வர், கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சாவூர்.

6. திரு, வித்துவான். ச. பாலசுந்தரம், துணை முதல்வர்,
கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சாவூர்.

7. திரு. வித்துவான். சி. கோவிந்தராசன், பேராசிரியர்,
கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சாவூர்.

8. திரு. வித்துவான். மீனு. இராமதாசன்,
முதனிலைத் தமிழாசிரியர்,
உமாமகேசுவர உயர்நிலைப்பள்ளி, கரந்தை, தஞ்சாவூர்.

Regd. No **TN / TJ / 6.**

தமிழ்த்தாய் வாழ்க

கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சை.

தமிழ்ப் பொழிலின் கையொப்பம்

		உள் நாடு	வெளி நாடு
1. ஆண்டு வரி	–	8–00	10–00
2. தனி இதழ்	–	0–60	

சங்க உறுப்பினர்

திங்கள் வரி	0—25 காசுகள்
ஆண்டு வரி	3—00
ஆயுள் வரி	100—00

சங்க நூல் நிலைய உறுப்பினர்

ஆண்டு வரி 1—00

விற்பனைக்குக் கிடைக்கும் நூல்கள் :

நெல்லை வருக்கக்கோவை	0—12
சித்தரந்தாதி	0—12
சுருதி வீணை	0--2
பரத சாத்திரம்	1—
கவியரசு நினைவு மலர்	1—00
சிவமும் செந்தமிழும்	0—2
Garland of Tamil Poetry	2—0
கச்சிக் கலம்பகம்—(பூண்டி அரங்கநாத முதலியார்)	0—5
தொல்-பொதுப்பாயிரம் உரை	0—12
யவன மஞ்சரி (த. இராமநாத பிள்ளை B. A., யாழ்ப்பாணம்)	1—50
இந்தியத் தல யாத்திரை T.B. தாச ராவ் B. A,, இரண்டாம் பாகம்	1—25
தமிழரசி குறவஞ்சி	0—62
யாழ்நூல் – சுவாமி விபுலானந்தர்	25—00
,, (அரை காலிகோ கட்டு)	27—00
கட்டுரைப்பொழில் (மணி விழா மலர்) சாதா கட்டு	12—00
ஷை காலிகோ கட்டு	15—00
மெய்ஞ்ஞானத்தின் கொலுவிருக்கையில் அஞ்ஞானத்தின் வழக்கீடு (இரண்டாம் பதிப்பு)	1—0

அசிரியரும் வெளியிடுபவரும் திரு. அரங்க. வே. சுப்பிரமணியம், பி. எ., கரந்தைத் தமிழ்ச் சங்கம், கருந்திட்டைக்குடி, தஞ்சாவூர் - 613002. அச்சிடுபவர். திருமதி. S. நிர்மலா, அன்னை அச்சகம், 1734, காந்திசாலை, தஞ்சாவூர்-613002.